**TTP - பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் (FAQs)**

**1. BEHF-ன் ஆசிரியர் பயிற்சி திட்டம் (TTP) என்றால் என்ன**?

**பதில்:** BEHF-ன் ஆசிரியர் பயிற்சி திட்டம் (TTP) என்பது தியானம், ஒருமித்த கவனம் (Mindfulness), மற்றும் ஆன்மிக அறிவியலை ஆழமாகப் புரிந்து கொள்ள உதவும் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஆன்மிகக் கற்றல் பயணமாகும். மேலும், இதில் கற்றுக் கொள்பவர்கள், தாங்கள் கற்றுக் கொள்பவற்றை பொறுப்புணர்வுடன் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளத் தயாராகிறார்கள்.

**2. இந்த வகுப்பை யார் நடத்துகிறார்கள்?**

**பதில்**: ஆசான் பிரதீப் விஜய் அவர்கள்

**3. இந்தப் பயிற்சி எந்த மொழியில் நடத்தப்படும்?**

**பதில்**: இந்தப் பயிற்சி தமிழ் மொழியில் நடத்தப்படும். பங்கு கொள்பவர்கள் கொடுக்கப்படும் பயிற்சிகளின் ஒப்படைப்புகளை (Assignments) தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ வழங்கலாம்.

**4. TTP பயிற்சியின் கால அளவும் கட்டமைப்பும் என்ன?**

**பதில்**: TTP என்பது 6 மாத காலம் கொண்ட முறைப்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டமாகும்.

இதில்:

- கோட்பாடுகளைக் கற்றல் (இணையவழி)
- நடைமுறை கற்றல் (நேரடி - 10 நாள் சுய உணர்தல் பயிற்சி முகாம்)

ஆகியவை அடங்கும்.

**5. இணையவழி வகுப்புகள் எந்த நாளில், எந்த நேரத்தில் நடைபெறும்?**

**பதில்**: இணையவழி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி முதல் 10:30 மணி வரை (இந்திய நேரப்படி) நடைபெறும்

**6. இந்தப் பயிற்சி ஆசிரியராக விரும்புபவர்களுக்காக மட்டும்தானா**?

**பதில்**: அவர்களுக்கு மட்டுமல்ல. மற்றவர்களுக்கு வழிகாட்டும் திறனை வளர்க்க இந்தப் பயிற்சி உதவினாலும், பலர் தங்களின் தனிப்பட்ட ஆன்மிக வளர்ச்சி, தெளிவு மற்றும் வாழ்க்கையைப் பற்றிய ஆழமான புரிதலுக்காக இதில் இணைகிறார்கள்.

**7. இந்தப் பயிற்சி மதம் சார்ந்ததா**?

**பதில்**: இல்லை. TTP என்பது விழிப்புணர்வு, உணர்வுநிலை (Consciousness) மற்றும் அகமாற்றம் ஆகியவற்றின் உலகளாவிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இதில் அனைவரும் பங்கேற்கலாம்.

5. **இப்பயிற்சியில் சேருவதற்கு ஆன்மிகத்தில் அல்லது தியானத்தில் முன் அனுபவம் அவசியமா?**
**பதில்**: முன் அனுபவம் அவசியமில்லை. ஆனால், தியானம், சுயவிசாரணை மற்றும் அகமுன்னேற்றத்தில் உண்மையான ஆர்வம் இருக்க வேண்டும். தவறாமல் தொடர்ந்து தியானம் செய்வது வலியுறுத்தப்படுகிறது.

8. **இந்தப் பயிற்சியில் சேர பட்டப்படிப்பு அல்லது ஏதேனும் குறிப்பிட்ட தகுதி தேவையா?**
**பதில்**: அடிப்படை பட்டப்படிப்பு இருப்பது பரிந்துரைக்கப்படுகிறது; ஆனால் அது கட்டாயமல்ல.

9. **இந்தப் பயிற்சி எனக்குப் பொருத்தமானதா என்பதை நான் எப்படி அறிந்து கொள்வது?**
**பதில்**: உங்கள் அகபயணத்தை ஆழப்படுத்த வேண்டும், விழிப்புணர்வுடன் வாழ வேண்டும், பிறரின் ஆன்மிகப் பயணத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும் போன்ற உள்ளார்ந்த விருப்பங்கள் உங்களுக்கு இருந்தால், இந்தப் பயிற்சி உங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும். திறந்த மனதுடன் இதில் இணையுமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம்

10. **இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தால் ஆசிரியர் சான்றிதழ் கிடைக்குமா?**
**பதில்**: BEHF வழிகாட்டுதல்களின்படி, பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து, வருகைப் பதிவு, ஒப்படைப்புகளைச்(Assignments) சமர்ப்பித்தல், திருப்திகரமான மதிப்பீட்டு முடிவுகள் மற்றும் 10 நாள் சுய உணர்தல் (Self Realization) முகாமில் பங்கேற்பு உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் ஆசிரியர் சான்றிதழ் வழங்கப்படும்.

11. **பயிற்சியின் நடைமுறை பகுதி என்னென்னவற்றை உள்ளடக்கியது?**
**பதில்**: நடைமுறை பகுதி 10 நாட்கள் சுய உணர்தல் நேரடி பயிற்சி முகாமை உள்ளடக்கியது. அதனைப் பற்றிய அனைத்து விவரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்.

**12. இணையவழி அமர்வுகளிலும், பயிற்சி முகாமிலும் கட்டாயமாக பங்கேற்க வேண்டுமா?**

**பதில்**: TTP சான்றிதழைப் பெற இரண்டிலும் பங்கேற்பது அவசியம். இணையவழி அமர்வுகள் கோட்பாடுகளைப் பற்றிய புரிதலை வழங்குகின்றன; முகாம் அவற்றை ஆழப்படுத்தும் நடைமுறை அனுபவத்தை வழங்குகிறது.

**13. இணையவழி அமர்வுகளில் மட்டும் கலந்து கொண்டு பயிற்சி முகாமைத் தவிர்க்கலாமா?**

**பதில்**: ஆம், இணையவழி அமர்வுகளில் மட்டும் பங்கேற்கலாம். ஆனால், பயிற்சி முகாம் இந்தப் பயிற்சியின் முக்கிய அங்கமாக இருப்பதால் அதில் பங்கேற்காதவர்கள் TTP சான்றிதழ் பெறத் தகுதியற்றவர்களாகிவிடுவர்.

**14. ஆன்லைன் அமர்வுகளை நிறுத்திவிட்டு முகாமில் மட்டும் பங்கேற்கலாமா?**

**பதில்**: ஆம், இணையவழி அமர்வுகளைத் தொடராவிட்டாலும் முகாமில் பங்கேற்கலாம். ஆனால், TTP சான்றிதழ் பெற தகுதி இருக்காது.

**15. ஆன்லைன் வகுப்புகள் கலந்துரையாடல் மற்றும் பங்கேற்பு நிறைந்ததாக இருக்குமா?**

**பதில்**: ஆம். ஆன்லைன் வகுப்புகள் கலந்துரையாடல் (Interactive) வகையில் நடைபெறும். இதில் கேள்விகள் கேட்பதற்கான வாய்ப்புகள், கலந்துரையாடல்கள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட செயல்பாடுகள் இடம்பெறும். இவை உங்களது பங்கேற்பையும் ஆழமான புரிதலையும் உறுதி செய்யும்.

**16. வருகைப் பதிவு (Attendance) தொடர்பான நிபந்தனை என்ன?**

**பதில்**: பயிற்சியை வெற்றிகரமாக முடிக்க குறைந்தபட்சம் 75% வருகைப் பதிவு கட்டாயமாகும்.

**17. இதில் மதிப்பீடு அல்லது தேர்வு இருக்குமா?**

**பதில்**: ஆம். இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒப்படைப்புகள் (Assignments) வழங்கப்படும். அவற்றை எவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்கான தெளிவான வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட

ஒப்படைப்புகள் மதிப்பீடு செய்யப்படும்; பின்னூட்டங்கள் மற்றும் முடிவுகள் பங்கேற்பாளர்களுடன் பகிரப்படும்.

### 18. இந்தப் பயிற்சி கல்வி நிறுவனங்களில் மட்டும் கற்பிக்க உதவுமா, அல்லது வேறு இடங்களிலும் கற்பிக்க முடியுமா?

**பதில்**: ஆம். பங்கேற்பாளர்கள் தங்களது உரையையும், கற்பித்தல் முறையையும் பார்வையாளர்களின் தன்மைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளக் கற்றுக்கொள்வார்கள். உதாரணமாக:

- கல்லூரிகள்
- பொதுநிகழ்ச்சிகள்
- முதியோர் இல்லங்கள்
- ஆதரவற்றோர் இல்லங்கள்
- நிறுவனங்கள் (Corporates)

போன்ற பல்வேறு சூழல்களில், நேரடியாகவும் (Offline) இணையம் மூலமாகவும் (Online) இந்தக் கற்றலைப் பயன்படுத்த முடியும்.